## 1. புத்தரின் சிந்தனைகள்

முதல் பொழிவு

*14.05.1995*

இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் **கபிலவஸ்து** என்னும் நகரில் பிறந்த புத்தர் **உலகில் அன்பும், அருளும், அமைதியும் காவிரி வெள்ளம் போலவும், கங்கை வெள்ளம் போலவும் பெருக்கெடுத்து ஓட அரும்பாடுபட்டார்.** அதற்காக, அவர் ஏந்திய போர்க்கருவி அறிவு, அறிவு, அறிவு மட்டுமே. புத்த ஞாயிறு தோன்றிப் பாரெங்கும் அறிவுக்கதிர்களைப் பரப்பத் தொடங்கியபோது அதுகாறும் உலகில் மண்டியிருந்த அறியாமையும், மூடநம்பிக்கையும் ஆகிய இருட்டுக்கள் அகலத் தொடங்கின.

புத்தர் மக்களுக்குத் தெளிவாகப் புரியக்கூடிய - மக்களின் பேச்சு மொழியாகிய பாலிமொழியிலும், பிராகிருத மொழியிலுமே தம்முடைய அறிவுரைகளைக் கூறிவந்தார். **பெருந்திரளான மக்களுக்காகப் பாடுபடும் எவரும் - மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்று கருதும் எவரும் – அந்த அந்த மக்கள் மொழியிலேயே பேச வேண்டும், எழுத வேண்டும், இலக்கியங்களைப் படைக்க வேண்டும்** என்பதைத் தம்முடைய வாழ்க்கையில் நடை முறையில் செய்து காட்டிப் பெருவெற்றி பெற்றவர் புத்தர். அதனால், **தாய்மொழி வழிக்கல்விக்கு உலகில் முதன்முதலில் வழிகாட்டிய உயர்ந்த சிந்தனையாளர் புத்தர்** என்று கூறலாம்.

கஞ்சி குடிப்பதற்கும் வழியில்லாதவர்கள் உண்ணா நோன்பின் பெருமையைப் பற்றிப் பேசவும், கந்தல் ஆடையை உடுத்தவும் இயலாத வறிய நிலையில் இருப்பவர்கள்

Scanned by CamScanner

ஆடம்பரமாக இல்லாமல், எளிமையாக ஆடை உடுத்துவதன் மேன்மையைப் பிறருக்கு எடுத்துரைப்பதும் மக்களால் ஏற்றுக்கொள்ளப் பெறுவது இல்லை. ஆனால், மன்னன் ஒருவனுக்கு மகனாகப் பிறந்த கௌதம புத்தர் ஆடம்பரமாக வாழ்வதற்கு அனைத்து வகையான வசதிகள் இருந்தும், அழகோவியமாக விளங்கிய அன்பான மனைவியிருந்தும், மழலை மொழி பேசி மனத்தை மயக்கும் குழந்தையிருந்தும், எல்லா வகையான பற்றுக்களையும் விட்டுவிட்டு, முற்றத்துறந்த முனிவராகி, எளிய ஆடையை உடுத்து, இரந்துண்டு உயிர்வாழ்ந்து, உலகத்துத் துன்பங்கள் அனைத்திற்கும் ஆசையே அடிப்படைக் காரணம், ஆதலின் அமைதியுடன் வாழவேண்டும் என்று விரும்பும் மக்கள் அனைவரும் ஆசையை அகற்றிப் பற்றறுத்து வாழும் பக்குவத்தைப் பெறவேண்டும் என்று எடுத்துரைத்தபோது, அந்த அறிவுரையை மக்கள் ஏற்றுப்போற்றிப் பின்பற்றத் தொடங்கினர். ஆதலின், பிறருக்கு அறிவுரை கூற முன்வருவோர் முதலில் தாம் அந்த அறிவுரையைப் பின்பற்றி நடந்து காட்ட வேண்டும் என்றும் புத்தர் உலகுக்கு உணர்த்தினார்.

மனிதன் வாழும்போதும் மகிழ்ச்சியோடும் மன அமைதியோடும் வாழவேண்டும்; வளர்ச்சியைப் போலவே தளர்ச்சியையும், முதுமையையும், வாழ்வின் நிறைவான மரணத்தையும் மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும்; இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையில்லாதவை என்னும் தெளிவு வேண்டும். இவ்வாறு, உலகத்து இயல்புகளை உள்ளவாறு உணர்ந்து தெளிவதே உயர்ந்த ஞானமாகும். தம்முடைய சொந்த அறிவைப் பயன்படுத்தி எதையும் ஏன்? எப்படி? எதற்கு? எவ்வாறு? என்று வினாக்களை எழுப்பி விடை காண்பவர்களே உயர்ந்த ஞானத்தைப் பெறமுடியும். கல்வியாலும், கேள்வியாலும், தவத்தாலும், ஒழுக்கத்தாலும் உயர்ந்து நிற்கும் சான்றோர்களுடைய இணக்கமும் நட்பும் அறிவுரையும் உயர்ந்த ஞானம் பெற உறுதுணை செய்வனவாகும். ஆகவே, சான்றோர்களின் சங்கத்துடன் தொடர்புகொண்டு நல்லறிவாகிய ஞானம் பெற்று வாழ்க என்பதும் புத்தபகவான் மக்களுக்குக் கூறும் அறிவுரையாகும்.

Scanned by CamScanner

புத்தர் எதிலும் ஒரு நிதானமான - அளவான - நடுநிலைமைப் போக்கைக் கடைப்பிடிக்குமாறு அறிவுரைகள் கூறிவந்தார். **அளவுக்கு மீறினால் அமிழ்தமும் நஞ்சாகும்.** சோறுண்பது உடல்வலிமையைப் பெருக்கும் என்பது உண்மையானாலும், சோறுண்பதே வாழ்க்கையாகக் கொண்டு அளவுக்குமீறி உண்பது கேடு தரும். உண்ணா நோன்பிருப்பது உடலுக்கும் மனத்துக்கும் நல்லது என்பது உண்மையானாலும் அளவுக்கு அதிகமாகப் பட்டினிகிடந்து உண்ணா நோன்பை மேற்கொள்வதும் உடலுக்குக் கேடுதரும். இதனை,

**"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கு மாறு"** (திருக்குறள் : 943)

என்னும் திருக்குறளும் தெளிவாகக் கூறும்.

தேர்வுக்குப் படிக்கின்றேன், படிக்கின்றேன் என்று சொல்லி, உறங்காமல் படித்துக்கொண்டே இருக்கும் மாணவர்கள் உடல்நலம் கெட்டுச் செம்மையாகத் தேர்வெழுத முடியாமல் போகின்றது. அதுபோலவே, எப்போதும் உறங்கிக் கொண்டே இருப்பவர்கள் உடம்பும் கெடும். ஆகையால், உறங்கும்போதும் அளவோடு உறங்கவேண்டும்.

ஒருவன் இரண்டு உச்சநிலைகளைத் தவிர்க்கவேண்டும்; அதிகம் உண்போனும், உண்ணாமல் பட்டினிகிடப்போனும், அதிகம் உறங்குவோனும், உறங்காமலே நாளைக் கழிப்போனும் ஞானியாக முடியாது; உலக இன்பங்களில் முழுதும் திளைத்திருக்கக் கூடாது; கடுமையாக உடலை வருத்திக் கடுந்தவம் புரிதலும் கூடாது என்பது புத்தரின் அறிவுரைகள் ஆகும். புத்தரின் ஏற்கத்தக்க இந்த அறிவுரைகளை நாம் ஏற்று நடப்போமாக.

## 2. புத்தரின் சிந்தனைகள்

இரண்டாம் பொழிவு

*15.05.1995*

உலகில் பிறந்த மக்கள் அனைவரும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், வாழ வேண்டும் என்பதற்காகப் புத்தர் அரும்பாடுபட்டார். மக்கள் அன்பும், அருளும் நிரம்பிய நெஞ்சினராய் வாழ்தல் வேண்டும். பிற உயிர்களின் துன்ப துயரங்களைத் தம்முடைய துன்பங்களைப்போல் கருத வேண்டும். வாடிய பயிரையும், உயிரையும் கண்டபோதெல்லாம் தாமும் வாடி வருந்த வேண்டும். அத்துடன் நில்லாது அவற்றினுடைய துன்ப துயரங்களைத் துடைக்கும் பணியையும் மேற்கொண்டாக வேண்டும். இன்னும் சொல்லப்போனால் **பிற உயிர்களிடத்து அன்பு காட்டாமல் அருள் காட்டிப் பற்றற்ற மனநிலையிலிருந்து – அந்த உயிர்களுடைய துன்பதுயரங்கள் தம்மை வருத்தாமல் – மனவமைதியுடனிருந்து அவற்றின் துன்பத்தை நீக்குவதற்குத் தொண்டு செய்வது மிகச் சிறந்ததாகும்.**

கருணைக்கடலாக விளங்கிய புத்த பகவான் அரசவாழ்வைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையை விட்டுச் சென்றபோது பிம்பிசார மன்னனின் யாகத்துக்காகக் கொண்டு போகப்பட்ட ஆட்டு மந்தையின் நடுவில், நடக்க முடியாமல் - நொண்டி நொண்டி நடந்து சென்ற ஒரு நொண்டி ஆட்டுக் குட்டியைத் தம் தோளில் சுமந்து சென்று, அந்தக் குட்டி ஆட்டின் துயரத்தைப் போக்கியருளினார். அத்துடன் நில்லாது, அந்த ஆட்டு மந்தையுடன் யாகசாலைக்குச் சென்று, மன்னனுக்கு அறவுரை போதித்து நாடெங்கும் வேள்விகளைத் தடுத்து நிறுத்தினார். உயிர் இரக்கம் என்பது நெஞ்சத்தளவில் நில்லாது - வெறும் வாய்வார்த்தையாக நின்று விடாமல் செயலில்

Scanned by CamScanner

வெளிப்பட வேண்டும் என்பதைச் செயலில் செய்து காட்டிய செம்மல் புத்தர் ஆவார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (திருக்குறள் - 972)

என்பதும், மக்களுள் உயர்வு தாழ்வு இல்லை என்பதும் புத்தர் கொள்கை. மக்களுக்குள் சாதி வேறுபாடு கற்பிப்பதனைப் புத்தர் முற்றிலும் வெறுத்தார். சாதிவேறுபாடுகளுக்கு அடிப்படையான நூல்களையும் வேதசாத்திரங்களையும் அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

பிறரைத் தாழ்வாகவும், தன்னை உயர்வாகவும் கருதித் தான் என்னும் ஆணவத்துடன் மனிதன் வாழ்வதற்குச் சாதியில் உயர்வு தாழ்வுகள் உண்டு என்று நம்பும் அறியாமையே காரணமாகும். அதுபோலவே, தான் தாழ்ந்தவன், தீண்டத்தகாதவன் என்று கருதும் தாழ்வு மனப்பான்மைக்கும், சாதி உண்டு என்று நம்பும் மூடநம்பிக்கையே காரணமாகும். பல நேரங்களில் பிறருக்கு உதவி செய்யத் தயங்குவதற்கும், உதவி செய்வதைத் தடுப்பதற்கும் சாதி உயர்வு தாழ்வுகள் காரணமாக அமைந்து விடுகின்றன.

புத்தர் ஒருநாள் உணவு உண்ணாமையால் நடுவழியில் மயங்கிக் கிடந்தபோது, ஆட்டிடையன் ஒருவன் அன்பு கொண்டு, வெள்ளாடு ஒன்றைக் கொண்டு வந்து அருகில் நிறுத்தி, அதன் மடிக்காம்புகளைப் பிடித்து இழுத்துப் புத்தர் வாயில் விழும்படி பாலைக் கறந்து விட்டான். சிறிது பாலருந்திய நிலையில் மயக்கம் தெளிந்த புத்தர், பாலைக் கறந்து கலத்தில் தரும்படி கேட்டார். ஆனால், ஆட்டிடையன் சாதிவேறுபாட்டைச் சுட்டிக்காட்டி, உயர்ந்த சாதிக்காரராகிய புத்தருக்குத் தீண்டத்தகாத சாதியைச் சார்ந்த தான் கலத்தில் பால் கறந்து கொடுப்பது தகாது என்று கூறி மறுத்தான். அப்போது புத்தர்,

"உயிர்வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன்பிறந்தவர் போல் - மாந்தர்

உறவுகொள்வர் அப்பா
ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா
எவர் உடம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்விழி நீர்க்கும் - உவர்ப்பே
இயற்கை குணமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்"

(ஆசியஜோதி, புத்தரும்,ஏழைச் சிறுவனும் : 12,13,14,16,17)

என்று ஆட்டிடையனுக்கு அறிவுரை கூறி அவனுடைய தாழ்வுமனப்பான்மையைப் போக்கினார். அதன்பிறகே இடையன் கலத்தில் பாலைக்கறந்து புத்தருக்குக் கொடுத்தான். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் **ஆசியஜோதி** என்னும் நூலில் கூறியுள்ள இக்கவிதை வரிகள் புத்தரின் சிந்தனைகளை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. ஆதலின், புத்தரின் அறிவுரைகளை ஏற்று, உயிரிரக்கம் கொண்டு சாதி வேறுபாடுகளை மறந்து, அனைத்து உயிரும் அமைதியுடன் வாழத் தொண்டு செய்வோமாக.

## 3. புத்தரின் சிந்தனைகள்

மூன்றாம் பொழிவு

*16.05.1995*

புத்தர் மக்கள் ஒழுக்கமுடன் வாழவேண்டும் என்பதை மிகவும் வற்புறுத்திக் கூறிவந்தார்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** (திருக்குறள் : 131)

ஆதலால், ஒவ்வொருவரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிப் போற்றி நடக்க வேண்டும். தவறுகளைச் செய்யாவிடில் தம்மால் உயிர்வாழ முடியாது என்னும் நிலை வருமானால், தவறுகளைச் செய்து உயிர்வாழ்வதைவிடத் தவறுகளைச் செய்யாது உயிர்விடுதலே மேலானதாகும்.

**"இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்**
**குன்ற வருப விடல்"** (திருக்குறள் : 961)

என்னும் வள்ளுவர் கருத்தை அவருக்கு முன்பே எடுத்துரைத்த சான்றோர் புத்தர் ஆவார். மேலும், அவர் சிந்தனை, சொல், செயல் மூன்றாலும் தூய்மை உடையவர்களே ஒழுக்கம் உடையவர்களாவர் என்று வற்புறுத்தினார். சொல்லுக்கும், செயலுக்கும் சிந்தனையே முதற்படி.

**எண்ணமும் செயலோடு ஒக்கும் என்பர் பரிமேலழகர். தீய** எண்ணங்களே பிறரைப் புண்படுத்தும் பொல்லாத சொற்களைச் சொல்லவும், பிறரை வாட்டி வருத்திக் கொல்லும் தீய செயல்களைச் செய்யவும் காரணமாகி விடுகின்றன.

பயிருக்கு இடையே முளைத்த களைகளையும், முட்செடிகளையும் அவை இளமையாக இருக்கும்போதே அகற்றிவிட வேண்டும். வளர்ந்த பிறகு, அவற்றைக் களைய

Scanned by CamScanner

முற்பட்டால் களைய முற்படுபவர் கைகளைக் காயப்படுத்தும்; சேதப்படுத்தும்; பயிர்களைப் பாழ்படுத்தும்.

> "இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து" (திருக்குறள் : 879)

என்பார் திருவள்ளுவர். அதுபோலத் தீய எண்ணங்களையும் அவை தோன்றும்போதே மறைந்து போகச் செய்ய வேண்டும். உடம்பின் மேல் உள்ள அழுக்கை நல்ல தண்ணீர் கொண்டு கழுவித் தூய்மை செய்வது போலத் தீய எண்ணங்களாகிய அகத்தழுக்கை நல்ல எண்ணங்களாகிய தண்ணீர் கொண்டு கழுவ வேண்டும்.

பிறர் பொருளை விரும்புதலும், பிறர் மனைவியை விரும்புதலும் கொடிய பாவச் செயல்களாகும். தனக்குரிய பொருளைப் பறிகொடுத்தவன் தன் பொருளைக் கவர்ந்த கள்வனுக்குக் கடுமையாகத் தண்டனைகளைக் கொடுக்க முன் வருவான். அதனால், பாவச் செயல்களாகிய குற்றச்செயல்கள் அதிகரிக்கும். ஒவ்வொருவரும் பாடுபட்டு உழைத்துத் தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தேவையான உணவை விளைவிக்க வேண்டும்; மக்களுக்குப் பயன்படும் பிற பொருள்களையும் உருவாக்க வேண்டும். அப்போதுதான் நாடு நாடாக இருக்கும்; நாட்டு மக்களும் நலமாக வாழமுடியும். அதற்குமாறாக நாட்டில் கள்வர்கள் பெருகிப் பிறர் உழைப்பால் உருவான செல்வத்தைக் கவர்ந்து வாழ்வார்களானால் நாடு வளம் குன்றும்; மக்கள் மன அமைதி இழப்பர். ஆகவே, உலகம் தோன்றிய நாள் முதலாகப் பிறர் பொருளைக் கவரும் பாவச் செயலை மக்கள் வெறுத்து வந்துள்ளனர். நாடாளும் மன்னர்களும் கள்வரைக் கொல்லுதலைத் தம்முடைய செங்கோல் ஆட்சியின் கடமையாகக் கருதினர். உண்மை பேசுதலாகிய ஓர் அறத்தை மேற்கொண்டவர்கள் பிற உயிர்களுக்குத் தீங்குதரும் காரியம் எதையும் செய்ய மாட்டார்கள். பிற உயிர்களைக் கொல்லாமையாகிய பேரறத்தை மேற்கொண்டவர்கள், தம் உயிரே போவதாக இருந்தாலும் பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்க மாட்டார்கள்.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை" (திருக்குறள் : 327)

"ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" (திருக்குறள் : 323)

என்னும் திருக்குறட்பாக்கள் புத்தர் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறுவனவாகும். கள்ளுண்டு களிப்பவன் பெற்ற தாயாலும் பிறன்போல நோக்கப்படுவான். அப்படிப்பட்டவன் சான்றோர்கள் முகத்தில் எவ்வாறு விழிக்க முடியும்? ஆகவே, மனிதனாகப் பிறந்தும் புழுப்போலக் கருதப்பட்டுப் பிறரால் வெறுக்கப்படுவதற்குக் கள்ளுண்பதுதான் காரணம் என்பதை மக்களுக்கு உணரவைப்பதற்குச் சான்றோர்கள் இடையறாது அறிவுரைகளைக் கூறிவந்தனர். அந்த வகையில் புத்த பகவான்

1. பிறர் பொருளை விரும்பாமை. 2. பொய்யாமை. 3. கொல்லாமை. 4. பிறர் மனைவியை விரும்பாமை. 5. கள்ளுண்ணாமை. 6. காமத்தைத் தூண்டும் ஆடல், பாடல்களில் பங்கு கொள்ளாமை. 7. மலர், நறுமணப் பொருட்கள் போன்ற ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்தாமை. 8. அகாலத்தில் உணவுண்ணாமை. 9. மகிழ்ச்சியைத்தரும் படுக்கைகளில் உறங்காமை. 10. பணத்தை வைத்துக்கொள்ளாமை ஆகிய பத்துவகை ஒழுக்கங்களையும் துறவிகள் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். இவற்றில் முதல் ஐந்து ஒழுக்கங்களையும் இல்லறத்தாரும் தவறாது மேற்கொண்டு ஒழுக வேண்டும் என்று அறிவுரை கூறினார்.

"கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்"
(சிலம்பு.வரந்தருகாதை : 97,98)

என்று சிலப்பதிகாரமும் இக்கருத்தை வற்புறுத்தும்.

ஆகவே, புத்த பகவான் கூறிய 1.பிறர்பொருள் வெஃகாமை. 2. பொய்யாமை. 3. கொல்லாமை. 4. பிறர்மனை நயவாமை. 5. கள்ளுண்ணாமை ஆகிய ஐம்பெரும் ஒழுக்கங்களையும் நாமும் போற்றிப் பின்பற்றிச் சான்றோர்களாக வாழ்வோமாக.

Scanned by CamScanner

## பசவரின் சிந்தனைகள்

உலகில் துன்பமும் கொடுமையும் அமைதியின்மையும் தோன்றி மிகுந்த துயரங்களால் மக்கள் வாடி வருந்தும்போது அந்த மக்களைக் காத்து வாழச்செய்வதற்காக ஆற்றல் மிகுந்த தலைவர்களும் அருளாளர்களும் உலகத்தில் தோன்றுவார்கள். அந்த வகையில், நம் பாரதநாட்டில் கருநாடக மாநிலத்தில் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிறந்த பசவர் மிகச்சிறந்த அருளாளராய் விளங்கினார்.

"தாயுள்ளம் - அன்பு உள்ளம் - பெரிய உள்ளம்
தொல்லுலகை மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம்"

படைத்தவர்கள் சான்றோர்கள்.

தனக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்திருந்தாலும் - அந்தப் பிள்ளைகள் அனைவரிடமும் சமமாக அன்புகாட்டுவது தாயின் இயல்பு. அந்த அன்பில் ஏற்றத்தாழ்வு இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளில் ஆற்றல் உடைய பிள்ளைகளைவிட ஆற்றல் குறைந்த - வாழத் தெரியாத - உடல் ஊனமுற்ற குழந்தைகளிடம் கூடுதலாக அன்பு காட்டுவாள். அதுபோலவே, தாயுள்ளம் படைத்த சான்றோர்களும் - செல்வ வளமுடையவர்களாய் சமுதாயத்தின் மேல்தட்டில் வாழும் மக்களிடம் காட்டும் அன்பைவிட - வாழ வழிதெரியாத ஏழை எளியவர்களிடம் கூடுதலாக அன்புகாட்டுவார்கள். அந்த வகையில் - மிகச்சிறந்த சான்றோராக - அருளாளராக வாழ்ந்த பசவரும் மக்கள் அனைவரையும் சமமாகவே கருதினார்; பிறப்பின் அடிப்படையில் மக்களுக்குள் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கும் வருணாசிரமதர்ம தத்துவங்களை ஏற்க மறுத்தார்; அன்பையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட - எல்லார்க்கும் நலம்பயக்கும் சமுதாய சீர்திருத்தக் கொள்கையை மக்களிடம் எடுத்துரைத்தார்.

Scanned by CamScanner

பசவர் பிறப்பால் ஓர் அந்தணர். ஆயினும், இளமையிலேயே பூணூல் அணிய மறுத்தார்; தனக்கு அக்கம் பக்கத்தில் வாழும் இன்னொரு மனிதனுக்கு - தன் உடன்பிறந்தவனுக்குக் கிடைக்காத ஒரு பொருளைத் தான் மட்டும் பெற்றுக்கொள்வது முறையானது ஆகாது என்று அவர் கருதியமைதான் இவ்வாறு அவர் பூணூல் அணிய மறுத்ததற்குக் காரணமாகும். மகாத்துமா காந்தியடிகள் எவ்வளவோ வசதி வாய்ப்பிருந்தும் - விலை உயர்ந்த ஆடைகளை அணிவதற்கு மறுத்து இந்த நாட்டில் வாழுகின்ற கோடானு கோடி ஏழை உழவர்களைப்போல் நாலுமுழ வேட்டியும் துண்டும் அணிந்து வாழ்ந்ததை எண்ணிப்பார்த்தால் பசவரின் உள்ளம் நமக்கு நன்கு விளங்கும். தொழில்களில் உயர்ந்த தொழில் இழிந்ததொழில் என்று வேறுபாடு இல்லை. மக்களுக்குப் பயன்படும் தொழிலெல்லாம் உயர்ந்த தொழிலே என்று கருதிய பசவர், தன்னைச் சார்ந்த மக்களுக்காக உழைப்பதுதான் உண்மையான இறைவழிபாடு என்று தெளிவுரை வழங்கினார்.

புறநானூற்றுப் புலவராகிய கணியன் பூங்குன்றனார்

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

(புறநானூறு : 191:12,13)

என்று கூறினார்.

அதுபோலவே,

"உலகத்தில் என்னைவிடத் தாழ்ந்தவன் எவனும் இல்லை;
அதுபோலவே, இறைவனுடைய அடியவர்களைவிட
உயர்ந்தவர் எவரும் இந்த உலகில் இல்லை"

என்று பசவர் முழங்கினார்

மலத்திடையே புழுத்தசிறு புழுவினிலும் கடைகேன் என்று தம்மைப்பற்றி மிகப்பணிவுடன் கூறிக்கொண்ட சமயச் சான்றோர்கள் - உண்மையில் தம்முடைய பண்பாலும் அறிவாலும் கலைஞானத்தாலும் ஆற்றலாலும் உன்னத இமயமலைபோல ஓங்கி உயர்ந்த பெருமைக்கு உரியவர்கள்.

Scanned by CamScanner

அதனால்தான் அன்பு வடிவான பசவரும் தம்முடைய அடியவர்களால் பசவேசுவரர் என்று அன்புடனும் பக்தியுடனும் அழைக்கப்பெற்றார். பசவேசுவரரைப் போற்றும் அன்பர்கள் தம்மைச் சார்ந்த உயிர்களை மதித்து அன்புடன் நடந்து கொள்வார்களாக.

## பசவரின் சிந்தனைகள்

## 2

அருள்வடிவாக விளங்கிய வீரசைவ சமயத் தலைவர் பசவர் அவர்கள் சமுதாயத்திலிருந்த அடக்குமுறைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் கண்டு எரிமலைபோல் குமுறினார்; ஏழை எளியோரைக் கண்டு புன்னகை பூத்தார். ஆகவே, அவரை ஒரு புன்னகை பூக்கும் எரிமலை என்று கூறலாம். பழத் தோட்டத்துக்குப் பாதுகாப்புக்காகப் போடப்பட்ட வேலியே அந்த மரத்தின் பழங்களைத் தின்றுவிடுமானால் - அந்த வேலியால் பயன் என்ன? வீட்டில் குடும்பத் தலைவியாக - குடும்ப விளக்காக விளங்கும் பெண் தன் சொந்த வீட்டிலேயே திருடத் தொடங்கி விட்டால் அப்புறம் அந்த வீட்டை வேறு யார் வந்து காவல் செய்ய முடியும்? தாய்முலைப்பாலே நஞ்சாக மாறிவிடுமானால் அவள் பெற்ற குழந்தையை வேறு யார் வந்து காப்பற்ற முடியும்? கோயிலில் பூசை செய்பவனே அங்குள்ள சிலைகளைத் திருடிவிற்றால் அந்தத் தெய்வத் திருமேனிகளை வேறு யார் வந்து பாதுகாத்துவிட முடியும்? அதுபோல் சமுதாயத்தில் உயர்ந்த பதவியில் உள்ளவர்களும் - செல்வ வளம் பெற்றுள்ளவர்களும் - அரசியலில் செல்வாக்கு உள்ளவர்களும் - அந்தச் சமுதாயத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து காப்பாற்றாவிட்டால் அந்த ஏழைகள் எப்படி உயிர்வாழ முடியும் என்று பசவர் கேட்டார்.

நான் உண்பதற்காக மட்டும் உயிர் வாழவில்லை. ஓர் உயர்ந்த குறிக்கோளுக்காகவே உயிர்வாழ்கிறேன். செல்வாக்குப் படைத்தவர்கள் ஏழை எளியவர்களுக்குச் செய்யும் கொடுமைகளைக் கண்டும் காணாமலும் போய்விடுவது என்பது

என்னால் இயலாது. கொடுமைகளைக் கண்டு எதிர்க்காமல் இருப்பது கோழைத்தனம். அது போர்க்களத்தில் புறங்காட்டி ஓடுகின்ற வீரனுடைய செயலைப்போல் கேவலமானதாகும். ஓ! இறைவனே! ஒரு தூய குறிக்கோளுக்காகப் போராடி மடிவது என்பது எனக்கு விழாநாளைப்போல் மகிழ்ச்சி தருவதாகும் என்று பசவர் நெஞ்சு நிமிர்ந்து முழங்கினார்.

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்"

என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில் முழங்கிய முழக்கம் ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே கருநாடகத்தில் பசவரால் முழங்கப் பெற்றுள்ளது.

பசவேசுவரர் - ஒரு புதிய - ஒழுங்குமுறைக்கு உட்பட்ட - ஏற்றத்தாழ்வு இல்லாத - எல்லோர்க்கும் நலம் செய்யக்கூடிய - ஒரு நல்ல சமுதாயத்தைக் கற்பனையில் கண்டு - கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்துப் புதியதோர் உலகம் செய்வதற்காகப் புரட்சி விதைகளைத் தூவினார். அந்தப் புதிய இயக்கத்திற்குத் தலைமைதாங்கி முன்னின்று வழிநடத்திச் சென்றார். அந்த இயக்கத்திற்கு அரசியல் துறையிலிருந்தும் - மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற பழக்கவழக்கங்களில் ஊறிப்போன பழமைவாதிகளிடமிருந்தும் பலத்த எதிர்ப்பு உருவாயிற்று. அதுகண்டு பசவர் அஞ்சவில்லை. திருநாவுக்கரசர்

"நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்"

என்று முழங்கியதுபோலப் பசவரும் முழங்கினார்.

தம்முடைய தூய குறிக்கோள் வாழ்வுக்கும் மெய்யான இறையன்புக்கும் நாடோறும் சோதனை வந்ததைப் பசவர் பார்த்தார். மரம் அறுக்கும் வாள் - முன்னும் பின்னுமாகச் சென்று மரங்களை ஒழுங்காகச் சீராக அறுத்துக் கட்டிடங்கள்

Scanned by CamScanner

கட்டுவதற்குத் தருவதுபோலச் சோதனைகளும் துன்பங்களும் தன் மனத்திலுள்ள மாசுகளை அறுத்துத் தள்ளி தன் மனத்தில் தோன்றும் கருத்துக்கள் பலர்க்கும் பயன்படுவதற்குத் துணை செய்வனவாகக் கருதிப் பொறுமை காட்டினார்.

வரக்கூடிய துன்பங்கள் எவையானாலும் அவை இன்றே வரட்டும், இப்போதே வரட்டும், இறைவனுக்கு அடியவனாகிய என்னை அந்தத் துன்பங்கள் என்ன செய்துவிட முடியும்? என்று பசவர் துணிவுடன் இருந்தார்.

இடும்பைக்கு இடும்பை படுப்பர்: இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்

என்னும் குறளுக்குப் பசவர் ஓர் எடுத்துக்காட்டாய் வாழ்ந்தார்.

பசவரின் வழி நின்று ––
துன்பத்தில் துவளாமல் இன்பத்தில் மகிழாமல்
ஆற்றுளி நிற்றல் ஆடவர் பெண்டிர்
அனைவரது கடமையாகும் என்பதை

உணர்ந்து துணிவுடனும் தெளிவுடனும் நாம் வாழ்வோமாக.

Scanned by CamScanner